DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, KARUR

C.C. No. 274/2023

Prosecution PW 8

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பியூலா ஞான வசந்தி |
| Father's Name | : | ஆஸ்வால்டு |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.08.2026.

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி மீது பிடி கட்டளை நிலுவையில் இருந்து வருவதால் அவருக்கு எதிராக வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.எண்.811/2023 என்ற எண்ணில் நிலுவையிலுள்ளது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் குடிபுகு பிரிவில் (Imigratrion) குடிபுகு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

24.03.2021 அன்று நான் கரூர் டிசிபி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பொறுப்பேற்றபோது, எனக்கு முன்பு ஆய்வாளராக இருந்த ரேனுகாதேவி என்பவர் 27.07.2020 அன்று சுபிதா என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று கரூர் மாவட்ட குற்றபிரிவு எண்.8/2020, ச.பி.406, 420 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல் விசாரணை செய்துள்ளார். மேற்படி வழக்கு கோப்பை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 21.09.2021 அன்று இவ்வழக்கில் 1ம் எதிரி முத்தையன் என்பவர் கரூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் சரணடைந்தவரை பிரமாண பத்திரம் தாக்கல் செய்து, போலிஸ் கஸ்டடிக்கு எடுத்து 29.09.2021 அன்று மேற்படி எதிரியை போலிஸ் கஸ்டடியில் வைத்து விசாரணை செய்து, மேற்படி எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தனபால், நிர்மல்கணேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். மேலும், சாட்சி 1 மற்றும் 2 ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்து, எதிரியிடம் பணம் கொடுக்கும்போது, தனது செல்போனில் பணம் கொடுத்ததை படம் எடுத்ததாக சொன்ன செல்போனை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்படி செல்போனில் உள்ள புகைப்படத்தை கரூர் தீபம் கலர்லேப் போட்டோ டெவலப்பர் திருமதி.கண்மணி என்பவர் மூலம் டவுன்லோட் செய்து 65 பி சான்றிதழ் பெற்றேன். மேற்படி கண்மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சட்டப் பிரிவு 406,420 இதசவிலிருந்து 120(பி), 406, 420 இதசவின்படி சட்ட பிரிவு மாற்றம் செய்தேன். **சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து 1ம் எதிரிகள் மீது 19.01.2022 அன்று நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு காரணமாக குறுக்கு விசாரணை செய்ய எதிரி கால அவகாசம் கோரியதால் அனுமதி மறுக்கப்பட்டு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**